# வரலாற்று நோக்கில் அற ஒழுக்கவியல் கருத்துக்கள் - ஏலாதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ந.அருள்மொழிச்செல்வன்**
தமிழில் முதுதத்துவமாணி ஆய்வுமாணவன்,
உயர் பட்டப்படிப்புக்கள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
nada19arul@gmail.com

**பேராசிரியர் ம. இரகுநாதன்**
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு காலத்தின் இலக்கியத்தினைக் கொண்டு அது தோன்றிய காலத்தின் வரலாறு, கருத்தியல் அடைவு ஆகிய இரு கருதுகோள்களையும் உள்ளடக்கி, அந்த இலக்கியம் தோன்றிய நாட்டினது அன்றேல் அம்மக்கட் கூட்டத்தினரது இலக்கிய உற்பத்தி, விநியோகம், நுகர்வு என்பவற்றை அடியாகக்கொண்டு அக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் அதன் பகைப்புலங்களையும் கோட்பாட்டு நிலையில் நின்று அறிந்துகொள்ளும் நோக்கில் ஏலாதியை அடிப்படையாகக் கொண்டு அதன் அற ஒழுக்கவியல் கருத்துக்கள் ஆராயப்படுகின்றன. ஏலாதி மனதுக்கும் உடலுக்கும் வலிமை சேர்க்கும் பண்புசார்ந்த அற இலக்கியமாகும். இந்நூலின் ஆசிரியர் சமணசமயத்தைச் சார்ந்த கணிமேதாவியார் ஆவர். ஆறு மூலிகைகளைக் கொண்ட ஏலாதி என்னும் மருந்துச் சரக்கினைப் போன்று உளநோயைத் தீர்க்கும் ஆறு அற ஒழுக்கக் கருத்துக்களை உள்ளடக்கிய 82 பாடல்கள் இந்நூலில் உள்ளன. பேசுகின்ற பொருளால் வெளிப்படுத்தப்படுகின்ற அழகியல் முறையினால் வரலாற்றிலிருந்து நீக்கிவிட்டுப் பார்க்கமுடியாதளவுக்கு இந்நூல் தன்னை நிறுவியுள்ளது. குறித்தகருத்துக்களைக் கட்டமைப்பதுடன் அவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதாகவும் அதிகாரப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கெதிரான குரல்களாகவும் அறக் கருத்துக்களை முன்வைத்துள்ளது. இந்நூல் இலக்கியமரபில் எத்தகையவகிபங்கைப் பெறுகின்றது? என ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வில் வரலாற்றுமுறையியல், விவரணமுறையியல் என்பன ஆய்வுமுறையியல்களாக அமைந்துள்ளன.

திறவுச்சொற்கள்: கணிமேதாவியார்,கருத்தியல்,தத்துவங்கள்,அறம்,வாழ்வியல்நெறி,ஒழுக்கவிதிகள்.

## அறிமுகம்

தமிழர் வரலாற்றின் இலக்கிய மரபில் ஒரு திருப்பு முனையாக அறநெறிக்காலம் விளங்குகின்றது. சமணமும், பௌத்தமும் மேலோங்கி ஆதிக்கம் செலுத்திய அறநெறிக் காலத்தில் சமயப் பொறையின்றி அற ஒழுக்க விழுமியங்களைப் புத்துயிர் பெறவைத்த பெருமை கணிமேதாவியாருக்குரியது. இல்லற வாழ்வினையும் வாழ்வியல் தத்துவங்களையும் அதுசார்ந்த அறக்கருத்துக்களையும், சமயவாழ்வியல் நெறியினையும் உலகறியச் செய்வதற்காகவும், மனித வாழ்வின் மறுமலர்ச்சிக்காகவும் ஏலாதி என்னும் நூல் தோற்றம் பெற்றதெனலாம். இந்நூல் தோன்றிய காலம், அறம் என்னும் எண்ணக்கரு பற்றிய விளக்கம், ஏலாதி கூறும் அறக் கருத்துக்கள், அவற்றின் மதிப்பீடு தொடர்பில் கோட்பாட்டு நிலை நின்று ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஏலாதி தோன்றிய காலமும் சமூக நிலையும்.**

தமிழில் தோன்றிய அற இலக்கியங்களுக்கும் அவை தோன்றிய சமூகத்திற்கு மிடையில் நெருக்கமான உறவு காணப்படுகின்றது. அத்தொடர்பானது அவ்விலக்கி யங்கள் எழுந்த காலத்தினை வரலாற்றுச் சூழமைவுப்படுத்துவதன் மூலம் அற இலக்கியங் களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

அறம்பற்றிய சிந்தனையை ஒரு கோட்பாட்டுநிலைப்படுத்தி அதனை வரையறைப் படுத்திய காலம் அறநூல்கள் பெருமளவு தோன்றிய காலமாகும். அறத்தினை ஒழுங் கமைத்து அதை சமூக, சமய இயக்கத்தின் அடிப்படையாகக் கொள்ளும் மரபு அறநூல்கள் பெருமளவு தோன்றிய காலத்திலேயே காணப்படுகின்றது. ஆதலால் இக்காலத்தில் அறத்தினைக் கோட்பாட்டுநிலைப்படுத்தி விளக்கும் அற இலக்கியங்கள் பெருமளவு தோற்றம்பெற்றன. இவ்வற இலக்கியங்கள் தோன்றிய காலம் குறித்து ஆராய்ச்சி யாளர்களிடையே கருத்து வேறுபாடுகளுண்டு. அதுமட்டுமன்றி அவர்களுடைய ஆய்வும் நீண்ட வரலாற்றையும், முரண்பாடுகளையும் கொண்டமைந்துள்ளன. ஆகவே அற இலக்கியங்கள் தோன்றிய கால வகைப்பாட்டினை வரலாற்று நிலைப்படுத்தி ஆய்வு செய்வதனை விடுத்து அற இலக்கியங்கள் தோற்றம்பெற்ற ஒழுங்கமைப்பில் அறத்தினை நோக்கலாம்.

அத்துடன் அறத்தினைக் கலையாகச் சொல்லும் கலைப் படைப்புக்களையும் அறத்தினை இலக்கணப்படுத்தி நோக்கும் இலக்கண நூல்களையும் அறச் சிந்தனை புரையோடியுள்ள பக்தி நூல்களையும் அறத்தினை இலட்சியமாகக் கொண்ட காவியங்களையும் இக் காலத்தில் காணலாம்.

இயற்கைநெறிக்கால இனக்குழும மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட சிதைவு, சமூக, பண்பாட்டிலும், கருத்தியலிலும் மாற்றங்களை உருவாக்கின. இயற்கைநெறிக்கால மக்களிடம் நீர்வழி நாகரிகம், நிரந்தர குடியிருப்புக்கள், சமூகக் கட்டமைப்புக்கள் என்பன உருவானது. இதனால் நில அடிப்படையில் தொழில் பிரிந்தது. சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. சமண, பௌத்தர்களின் அறம், ஒழுக்கம் முதலிய போதனைகள் தனி உடைமையை ஆதாரமாகக் கொண்டமைந்தன. வணிகம் மேலாண்மை பெற்றிருந்தது. உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளாத புதியதொரு வர்க்கம் தோற்றம்பெற்றது. திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்து அளவறிந்து ஈந்து நாட்டைக் காத்தல் அக்கால அரசனின் கடன் எனப்பட்டது

அறநெறிக்காலத்தில் அரசன் சமுதாயத்தலைவன், மனிதருள் உயர்ந்தோன், சான்றோன், அறிஞன் என மதிக்கப்பட்டான். இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பன அரசின் தலையான பணியாகக் கருதப்பட்டது. மன்னனுக்கும் மக்களுக்கு மிடையில் இடைவெளி தோன்றியது. இதனால் இனக்குழுத்தலைவர்கள், அரசர்கள், அந்நியர்கள் ஆகிய மூன்று பிரிவினருக்குமிடையே போர்கள் நடைபெற்றன. இப்போர்கள் அரசியலில் பதற்றமான சூழலை ஏற்படுத்தியிருந்தது. அரசர்களுடன் வாதிடக் கூடிய நிலையில் வணிக வர்க்கம் இக்காலத்தில் மேலோங்கியிருந்தது. சமூகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட சடங்கு, சம்பிரதாயங்கள் அக்காலத்து அறக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தின.

அறநெறிக் காலத்தில் ஒப்பீட்டளவில் அரசுருவாக்கம் வளர்ச்சியடைந்த நிலையில் சமூக அதிகாரத்தை மேலும் கட்டமைக்க வேண்டிய தேவையும், அதற்கான

முயற்சிகளும் அறக் கருத்தியலின் அடியாகத் தோன்றின. பெருந்தெய்வ வழிபாடு பெருமதமாக வளர்ச்சியுறாத நிலையில் அரசுருவாக்கம் முனைப்புப் பெற்ற போது பெருந் தெய்வ வழிபாடும் கோயில்களும் மதத்தை நிறுவனமயமாக்கும் முயற்சிகளும் அவற்றை முன்னிறுத்துகின்ற அற இலக்கியங்களும் ஏனைய சமூக அமைப்புக்களும் இக்காலத்தில் அதிகார மையப்படுத்தலை வலியுறுத்தின. இதனால் குடும்பம், இல்லறம், ஒழுக்கம், கற்பு, பக்தி, ஆகிய சமூக அமைப்புக்களும் கருத்தியல்களும் மேலோங்கின. இத்தளங்களி னூடாக இக்காலச் சமூகம் வளர்ச்சிபெற்றது. சமூக அதிகாரத்தை ஒருமுகப்படுத்து வதற்காக பண்பாடு என்ற கட்டமைப்பைத் தோற்றுவித்தது. புதிதாகத் தோற்றம்பெற்ற சமூக அமைப்புக்களின் அதிகாரங்களும், அதிகாரம் பெற்ற அரசின் வகிபாகமும் இணைந்து தெளிவானதொரு வரையறையை நோக்கிப் பயணித்தன. குடும்பம் என்னும் அமைப்பு அதன் அர்த்தத்தில் வளர்ச்சியுறாத பண்டைத்தமிழ் அகப் பாடல்கள் அறநெறிக் காலத்தில் ஒப்பீட்டளவிலேனும் எழுதப்பட்டிருக்கவில்லை.

அதேபோல சமூக உறவுகளும் தனிநபர் நடத்தைகளும் குடும்பம் குலம் என்ப வற்றிற்கு இடையிலான உறவுகளும் அவற்றின் அதிகாரங்களும் ஒழுங்கமைக்கப்பட்டன. இதன் விளைவாக இல்லறம், ஒழுக்கம், கற்பு, விருந்தோம்பல், என்னும் குடும்பக் கட்டமைப்பின் உருவாக்கம், அமைதியான வாழ்வியல் பற்றிய சிந்தனையைத் தோற்று வித்தது. அத்துடன் இறுக்கமாக வரையறுக்கப்பட்டு மீறமுடியாத கருத்தியல்களாக அறக்கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பண்டைத்தமிழ்ச் சமூகத்தின் காதலுணர்வுக்கு முக்கியத்துவமில்லாது போயிற்று. அக்காலத்தில் நிலவிய மதச்சார்பற்ற செழுமையான அக இலக்கிய மரபை அறநெறிக் காலப் பெருந்தெய்வ பக்தி இலக்கியமரபு கையாளத் தொடங்கியது. சமயப் பிரச்சார வாதிகள் அறக் கருத்துக்களைப் பயன்படுத்தி இலக்கியம் படைத்த காலத்தில் சமூகத்தில் அற ஒழுக்க வாழ்வியல் நிலை பற்றிய நோக்கு அவசியமாகின்றது.

இயற்கைநெறிக்காலச் சிதைவு சமணமும், பௌத்தமும் அரச ஆதரவுடன் மதப்பரப்புரை செய்வதற்கு வழிவகுத்தது. மதப்பரப்புரைக்குக் கருவியாக அறக் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. வைதிக அவைதிக மதங்களுக்குள் ஏற்பட்ட போட்டியினால் பெருமளவு அறநூல்கள் தோன்றின. இதனால் ஏனைய நூல்களும் அறநீதிக் கருத்துக்களின் தாக்கத்துடனேயே தோன்றின. இக்கால நூல்களின் அறம்சார்ந்த கருத்தியலுக்கு சமயக் கொள்கைகள் முதன்மைபெற்றன.

**அறநெறிக்கால வரலாற்றில் கணிமேதாவியார்:**

கணிமேதாவியார் ஒரு சோதிடராக அல்லது எண்கணிதத்தில் வல்லவராக இருந்திருக்கலாம். அதனால் “கணி”(கணியம் தெரிந்தவன்) என்னும் அடைமொழி இவருக்குத் தொழிற் பெயராக வந்திருக்கலாம் என்பர். ஏலாதி மட்டுமன்றி திணைமாலை நூற்றைம்பதையும் இவரே ஆக்கியுள்ளார். இவர் மாக்காயனின் மாணவன் எனக் குறிப்பிடுகின்றனர். அருவக் கடவுளை வாழ்த்தி ஏலாதியைத் தொடங்குவதனைக் கொண்டு இவரைச் சமணசமயத்தவர் எனச் சுட்டுவர். இவரது இந்நூல் மனதுக்கும் உடலுக்கும் வலிமை சேர்க்கும் பண்பு சார்ந்த அற இலக்கியமாகும். சிறப்புப் பாயிரமும் கடவுள் வாழ்த்தும் அடங்கலாக 82 வெண்பாப் பாடல்களைக் கொண்டது. “ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சிறுநாவல்” முதலான ஆறு மூலிகைகளைக் கொண்ட ஏலாதி

என்னும் மருந்துச் சரக்கினைப் போன்று உளநோயைத் தீர்க்கும் ஆறு அற ஒழுக்கக் கருத்துக்களை உள்ளடக்கிய பாடல்களைக் கொண்ட நூலாகத் திகழ்கின்றது. இல்லற, துறவற, நல்லறக் கருத்துக்களை இந்நூலில் காணலாம். வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கையாளப்பட்ட அறநூல் என்னும் வகையில் இதன் காலத்தினைக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கொள்கின்றனர்

.

**அறம்**

அறம் என்றால் என்ன என்பது பற்றித் தெளிவான புரிதலுக்கு வருவதில் ஆராய்ச்சியாளர்களிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. காலம், இனம், மொழி, சமூகம், சமயம், கலை, கலாசாரம் வர்ணப்பாகுபாடு சார்ந்து மாறிக்கொண்டிருக்கும் அறத்திற்கு சரியானதொரு வரைவிலக்கணத்தினை முன்வைப்பதென்பது சவாலான விடயமாகவே உள்ளது.

'Ethics' என்ற ஆங்கிலச் சொல்லின் இணைப்பதில்ச் சொல்லாக அறம் திகழ்கின்றது. 'Ethice' என்ற சொல் 'Ethos' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். இச்சொல் முதலில் மக்கள் குழுமியிருந்த இடம் என்ற பொருளைக் குறித்தது. பின்னர் பழக்க வழக்கம், மனநிலை, குணம், சிந்திக்கும் முறை, முதலான பொருள்களைக் குறிக்கப் பயன்பட்டது. "நல்ல, தீய செயல்களில் இருந்து தோன்றும் அற இயல் பற்றிய ஆய்வியல் கலையே" "எதிக்ஸ்"(Ethics) எனப்பட்டது 'Ethics' என்ற சொல்லை இலத்தீன் மொழியில் 'mos' என்பர் 'Mores' என்பதற்கு ஈடான மொழிபெயர்ப்பாக பழக்கவழக்கம், குணம், நடத்தை, உள்ளுணர்வு, சட்டம், ஒழுங்கு, நாகரிகம், ஆடைமுறை முதலானவற்றைக் கூறலாம். (Ethics, 1989: P.05) கிரேக்க முன்னோடிகளையும் "அரிஸ்ரோட்டிலையும்" சார்ந்து "சீரோ" என்பவர் 'Moralitas' என்ற சொல்லை உருவாக்குகின்றார். 'Ethics' என்ற கிரேக்கச் சொல்லும் 'Moralitas' என்ற இலத்தீன் சொல்லும் ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. (முத்துலட்சுமி.ச பக்கம் - 04) அறம் என்னும் பதத்திற்கான பொருளாக வழியைக் கூறு, அறுத்துச்செல், வழியை உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து, போன்றவற்றைக் கூறலாம். சுருக்கமாக "தீயவற்றை அறுத்தெறிதல்" எனப் பொருள் கொள்ளமுடியும். "அறம்" என்பதன் வேர்ச் சொல்லான "அறு" என்பதற்கு "களைதல்" என்று பொருள் கொள்ளலாம். இங்கு தீயவற்றைக் களைந்து நல்லனவற்றை வரையறுப்பதாக அறம் அமைகின்றது. இவ் அறத்தினை இயல்பூக்க நிலை, மனச்சான்று நிலை, மரபொழுக்க நிலை என மூன்றாக வகைப்படுத்தும் மரபு காணப்படுகின்றது. (நடராஜன்.சோ, 2008, பக் 09-10) திருக்குறளுக்கு உரை தந்த பரிமேலழகர், அறமாவது மனு முதலிய நூல்களில் "விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும்" அறம் எனக் குறிப்பிடுகின்றார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இல்லா தொழித்தல் அறம். (குறள்.35) மனிதன் தனக்கென வகுத்துக்கொண்ட எண்ணம், சொல், செயல் ஆகிய வரையறை சார்ந்த கருத்துப் பொருளே "அறம்" எனப் பல வரையறைகளைக் கூறமுடியும்.

அறம் மனிதர்களின் அன்றாட நடத்தைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. ஐம்புலன்களின் இயக்கங்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், பாலியல் செயற்பாடுகள், என்பவற்றைக் கட்டுக்குள் கொண்டுவருவதனை அறம் எனக் குறிப்பிடலாம். நாக்கு, அறத்தினை ஆக்க அழிக்க மறைக்கவல்ல ஆதிக்க நிலைப்பட்ட முதல் நிலை

உறுப்பாகத் திகழ்கின்றது. (ராஜ் கௌதமன்., (1997),பக்-13) அறம் உடைமை சார்ந்த கருத்துப்பொருளாகும். இயற்கையால் உவந்தளிக்கப்பட்ட உலகப் பொருட்களை உடைமை பூணுதல், பாதுகாத்தல், நுகர்ந்துகொள்ளுதல் உவந்தளித்தல் பகிர்ந்து கொள்ளுதலில் கொண்டுவரப்பட்ட ஒழுங்கமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் தடைகளும், தண்டனைகளும் அறமாகத் தோன்றியது. அதிகாரக் குடையின் கீழ் உருவாக்கப்பட்ட சடங்குகளின் உட்பொருளாக அறம் பேசப்பட்டது. அறம் நிலைப்பதற்கு அச்சமே பிரதானம். அதிகாரம் மிக்கவர்கள் அறத்தை நிலைநாட்டினர். தண்டனைக்கு அஞ்சி அறக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. இவ் அறத்திற்கெனத் தனித்துவமாக இலக்கணம் வகுக்கப்பட்டது. இவ்வறத்தின் ஒருபகுதியாகவே ஒழுக்கத்தினைச் சான்றோர் முன்வைத்தனர். அதனை விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகின்றது.

## ஒழுக்கம்

மனிதர்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற தனித்துவமான பண்புகளுள் ஒழுக்கம் என்னும் பண்பு முதன்மையுடையது. ஒழுக்கம் என்னும் சொல் “ஒழுகு” என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததென்பர். ஒழுகு என்னும் சொல்லிற்கு “இடையறாது கடைப்பிடித்தல்” என்பது பொருள். வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்திலும், எவ்விடத்திலும் தவறாது மேற்கொண்டொழுகுவதை ஒழுக்கம் எனலாம். ஒழுகு என்னும் அடிச் சொல்லிற்கு “நட” என்னும் பொருளும் உண்டு இதனால் ஒழுக்கம் என்பது “நடக்கை” எனவும் பொருள் தருகின்றது. தமிழ்மொழி மரபுப்படி நடக்கை என்பது நன்னடக்கையையே குறிக்கின்றது.

அறம் என்னும் கருத்துப்பொருள் செயல் வடிவம் பெறும் நிலையே ஒழுக்கம் எனப்படுகின்றது. ஆங்கிலத்தில் பழக்கவழக்கங்களையும், பற்றுக்களையும் விளக்கி உரைப்பதற்கு, “எதோசு”(Ethios) என்ற பதத்தைப் பயன்படுத்தினர். ஆங்கிலத்தில் ஒழுக்கத்தினைக் குறிக்கும் “மோரல்”(Moral) என்னும் பதம் “மோர்சு”(Mores) என்னும் இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபாகும். “மோர்சு”(Mores) என்பது பழக்கவழக்கத்தினைக் குறித்து நிற்கின்றது. சமூகமொன்றில் வாழுகின்ற மக்கள் கூட்டத்தினர் கூட்டுப் பொறுப்புடன் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள், நடத்தை விதிகள் ஒழுங்கமைக்கப்படும்போது அதை ஒழுக்கம் (Morality) எனக் கொண்டனர்.

## ஏலாதியில் அற ஒழுக்கவியல் கருத்துக்கள்:

கணிமேதாவியார் ஏலாதியில் அற ஒழுக்கக்கருத்துக்களைக் கையாண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டினை ஆளவேண்டிய அரசு எவ்வாறிருக்க வேண்டும் என்பதனை நூலின் பல பகுதிகளில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் அரிய தவறுகள் நிகழாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஐயுறவு ஏற்பட்டபின் தேற்றுதல் என்பது முடியாத காரியமாகிவிடும். தன் தலைவனுக்குத் தேவையான விடயத்தினை மட்டும் ஒரு அமைச்சன் கூறுதல் வேண்டும். சொற்காத்தல், வீண் வார்த்தை தவிர்த்தல், திறம்பட உரைத்தல், மதினுட்பத்துடனுரைத்தல், தர்கத்துடனுரைத்தல், அவையின் தன்மையறிந்து ஆராய்ந்து தகுதியானவற்றைப் பேசும் பண்பினை கொண்டவனாக அமைச்சன் இருத்தல்வேண்டும்.

"குடியோம்பல் வண்கண்மை நூல்வண்மை கூட்டம்

மடியோம்பல் ஆற்றலுடைமை......" (ஏலம் 17)

எனும் பாடலில் குடிகளைப் பாதுகாத்தல், தொழில் முகத்தல், ஆண்மை, நூல் புலமையில் கலக்கமுறாத அறிவு, களவும் சோம்பலும் தன்னிடத்தில் நிகழாதவாறு பாதுகாத்தல், ஆற்றலுடைமை அரசாட்சியைப் பேணல், மக்களுக்கு நல்லுணவு நல்ல பொழுதுபோக்கு இனிய உறைவிடம் ஏற்படுத்திக் கொடுத்தல், என்பன நல்லதொரு அரசின் கீழிருக்கும் அமைச்சுக்குரிய அற ஒழுக்கமுறைமை என கணிமேதாவியார் உரைக்கின்றார். இப்பண்புகள் ஒரு நாட்டின் நல்லொழுக்கமுள்ள அரசவையைக் கட்டியெழுப்புவதற்கான பெரும் முயற்சியாகக் கொள்ளமுடியும்.

இயற்கை நெறிக்கால இலக்கியங்கள் அரசர்கள் எக்காரணங் கொண்டும் தூதரை கொல்லுதலோ துன்பஞ் செய்தலோ கூடாது என்னும் கருத்தை அரசியல் மரபாக வலியுறுத்தின. அக்காலத்தில் பெரும்பாலும் புலவர்களே தூதுவர்களாகச் சென்றமைக் கான சான்றுகள் காணப்படுகின்றன. தூதுவன் அரசனுக்கும் தன்நாட்டுக்கும் நன்மை பயக்கின்ற முறையில் செயலாற்ற வேண்டும். அன்பும், பண்பும், ஆழ்ந்த இயற்கையில் கைவரப்பெற்றதும் நல்ல நூலில் பெற்றதுமான அறிவும், சொல் வன்மையும், சொற் கவர்ச்சியும், நல்ல தோற்றப் பொலிவையும் கொண்டவன் தூதுரைக்கச் செல்லும்போது தன்னாற்றலால் எதிரியைக் கவர்ந்து போரை நிறுத்திவிடுவான் என்பதே அறநூல்களின் கருத்தாக வெளிப்படுகின்றது. முன்னோர்களால் போருக்கான காரணங்களை இல்லாதொழிக்க முடியாமைக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்து எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அன்புடைமை, பண்புடைமை, அறிவுடைமை, அறம், மதிநுட்பம், சொற்தேர்ச்சி, சொற்கவர்ச்சி, சொல்லாற்றல், தோற்றக்கவர்ச்சி, வீரம், அஞ்சாமை, என்னும் தகுதிப்பாடுகளைத் தூதுவன் மீது ஏற்றித் தூது செல்பவர்களுக்கான பண்புகளையும் ஒழுக்கங்களையும் ஏலாதி மொழிந்துள்ளது. (ஏலம்.26) இங்கு தூதனுக்கு இருக்கவேண்டிய தகுதிப்பாடுகள் அனைத்தும் ஓர் அமைச்சனுக்கிருக்கவேண்டிய பண்புகளைவிட ஒருபடி மேலே சென்று குறிப்பிட்டுள்ளார்.

பெண் போகந்துய்த்தல், தேடிய பொருளை வீண்விரயமாக்கல் தேவையற்ற வேட்டை, மதுவருந்தல், சூதாடல், வன்சொல் பேசல், துன்புற்றிருக்கும் இனத்தின்மீது போர் தொடுத்தல் போன்ற ஒழுக்கமற்ற செயல்களை செய்யாதிருத்தலே (ஏலம் 18) அரசனுக்குரிய நல்லொழுக்கமாகக் கருதப்படுகின்றது.

சமய நெறி என்பது குற்றமற்ற ஒழுக்கநெறியான பொய்தீர் ஒழுக்கநெறியாகும் இது அறவிழுமியங்களால் புனையப்பட்டது. ஆதலால் அறுவகைச் சமய நூல்களையும் கற்று சமய ஒழுக்க நெறியில் நின்று வாழ்பவனுக்கே வீடுபேறு கிட்டும் என ஏலாதி குறிப்பிடுகின்றது. (ஏலம்.75)

ஒரு சமூகம் சிறப்புடனியங்க சமூகத்தை ஆளும் அரசு சரியாக இருத்தல் வேண்டும் என்னும் சிந்தனையுடையவராக இருக்கும் ஆசிரியர் அரச இயந்திரம் மட்டுமல்லாது அங்கு வாழும் சான்றோரும் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று எண்ணுகின்றார். சான்றோர்க்கணியாக பிறர் மனை நயவாத சான்றாண்மையும் காதலுடன் கூடிய இல்லற வாழ்வும் கொல்லாமையும் கொலைக்குத் துணை போகாமையும் பொய்யுரைக்காமையும் திருடாமையும் காமங்கொள்ளாமையும் சிற்றினம் சேராது கூறப்படும் இரகசியப் பொருளில் செவிடனாகவும் பிறர்க்கு இன்னாச்சொல்

உரைப்பதில் ஊமையாகவும் இருத்தலை உரைக்கின்றார். (ஏலம்.19,28,29)

"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி வாழிய நிலனே!" (புறம்.187) என்னும் ஔவையாரின் வாக்கு இங்கு மனங்கொள்ளத்தக்கது. ஒரு நாட்டில் ஆட்சியாளர்கள் மட்டுமன்றி அங்கு வாழுகின்ற மக்கள் கூட்டத்தில் ஆடவர்கள் நல்லொழுக்கமுடைய வராக இருந்தால் மட்டுமே அந்நாடு சிறக்கும். அந்த நாட்டில் பொய் சொல்லாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, பெண்ணின்பந்துய்ப்பதில் உரிய கட்டுப்பாடு, இனியவை கூறல், விருந்தோம்பல் என்னும் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் சமூகத்தினை உருவாக்கவேண்டும் என எண்ணிக் கணிமேதாவியார் இந்நூலை யாத்திருப்பது புலப்படுகின்றது. பொதுமகளிர் சேர்க்கையும் அவர் கலை நிகழ்வுகளை நாடலையும் சான்றோர் ஒதுக்குவர். தவறின் பகை, பழி, பாவம், தீச்சொல், சாவு வந்துசேரும் என எச்சரிக்கின்றார். (ஏலம்.25)

இல்லாதவர்களுக்கு உணவு மருந்து உடுக்கை உறைவிடம் கொடுப்பவர் அறிஞராய் மதிப்புடன் வாழ்வர். (ஏலம்.09) எள்ளும் அரைஞாணும் எண்ணெயும் உடையும் போர்வையும் பணமும் உணவும் வறியார்க்குத் தேடிக் கொடுப்பவன் இல்லறத்தில் மனைவி, பிள்ளைகளுடன் நல்வாழ்வு வாழ்வான். (ஏலம்.50) மனிதன், பூமியில் பிறந்து தேடுகின்ற பெருஞ் செல்வம் இந்தப் பூமியில் அனுபவிப்பதற்கு மட்டுமேயாகும் அதனை தனியொருவனாக அனுபவிக்காமல் எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும். அதனால் புண்ணியம் உண்டாகும். அப்படிச் செய்யாமல் பொருள் சேர்த்து இறப்பதால் எந்தப் பயனும் இல்லை ஈயாத ஈட்டத்தால் மறு பிறவி சிறப்பற்றதாகிவிடுமென கணிமேதாவியார் எச்சரிக்கின்றார்.

ஏலாதி தோன்றிய காலத்தில் மக்கள் வாழ்வியல் பெரும் அல்லலுக்கு உள்ளாகியிருந்ததையும் ஊகித்து உணரமுடிகிறது. பண்டைய இலக்கியங்களில் கூறப்பட்ட உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. என்னும் அறவாழ்வு இந்நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பிறருக்கு உணவளித்து வாழ்பவன் மனைவி மக்களுடனும் சுற்றத்துடனும் இன்புற்று வாழ்வான். (ஏலம். 50) நீர் நிலைகளை அமைத்தும் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தும் தங்கு மண்டபங்களை அமைத்தும் மக்களுக்கு உதவுபவன் செல்வந்தனாக ஆடல் பாடல் தெரிந்த காதல் மனையாளுடன் ஊடிக் கூடி மகிழ்ந்திருப்பான். (ஏலம். 51) இல்லத்தினை, கண்ணை, செல்வத்தினை, விளை நெல்லை, ஆநிரையை, உணவிட்டு ஆதரவளித்தவன் அரசபதவி பெற்று மனைவி மக்களுடனும் சுற்றத்துடனும் இனிய உணவுகளை உண்டு நல்வாழ்வு பெறுவர். (ஏலம். 52) தாழ்நிலையோர், புண்பட்டோர், கண்கெட்டோர், அயல் நாடு செல்ல முயல்வோர், மேல்நிலை இழந்தோர், தவசிகள், இல்லத்தை இழந்தவர்கள், செல்வத்தை இழந்தவர்கள், விளைச்சலை இழந்தவர்கள், ஆநிரையை இழந்தவர்கள், வெயிலில் வாடிநின்று பொருளீட்டியவர்கள், அந்தணர், பசித்தோர், குழந்தைகள், பிறரால் வெறுக்கப்பட்டோர், தம்மைக்காக்கும் வலுவிழந்தோர். நல்லொழுக்கத்தில் நிற்போர், மகவினைப் பெற்றோர், பெறுங்காலத்தில் வேதனைக்குட்பட்டு நிற்போர், கருவுற்றோர், அறிவு மயங்கினோர், வாதநோயால் துன்புற்றோர், குற்றங்களுக்காக காலில் தளையிடப்பட்டோர், உணவின்றி மெலிந்தோர், முன்வினையால் தாழ்ந்தோர், பெண்கள், ஏதிலிகள், பிணியுடையோர், கருஞ்சிரங்கு, பெருஞ்சிரங்கு, வெள்ளைத்தொழுநோய், கல்லடைப்பு, வாதம், வயிற்றெரிச்சல் உடையோர், முற்பிறப்பில் காம இன்பத்தினை அனுபவிக்காது

இறந்தோர், பிறர் பொருளை விரும்பாதோர், கல்லாதார் கூட்டத்தைச் சாராதோர் எனக் குறித்துரைத்த யாவருக்கும் நோய்க்கு மருந்தும் உணவு, உடை, உறையுள் கொடுத்து ஆதரித்தவன் அரசுரிமையையும் அரச போகங்களையும் நல் மனையாளையும் சிறந்த புத்திரரையும் பெற்றுச் சுற்றத்தோடு வாழ்வான். (ஏலம்.53,54,55,56,57,58,80) என்று குடிபோற்றி வாழ்பவர்களுக்கு அறநூல்கள் வெகுமதியாக நல் வாழ்விற்கான வாழ்த்துக்களைப் பரிந்துரை செய்கின்றது.

அறநூல்களின் கொடை பற்றிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கின் ஆதிகால ஆண்டானடிமைச் சமுதாயத்திலிருந்து நிலவுடைமை, பெருவாணிகச் சமுதாயம் வரை வல்லோரால் சேர்த்துக் குவிக்கப்பட்டுள்ள செல்வங்கள் ஒருபுறமும் பொருளுக்காக ஏங்கித் தவித்து நிற்கும் சமூகம் மறுபுறமும் வாழுகின்ற வாழ்க்கை முறையை மாற்றி சமவுடைமைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான கருத்தியலைத் தோற்று விக்க முற்படுவது தெளிவாகின்றது.

ஒரு மனிதன் தானும் தன் சுற்றமும், வறுமையற்று வாழ்வதற்காகவும், ஈகை, விருந்தோம்பல், இல்வாழ்க்கை, என்பவற்றிற்காகவும் செல்வம் தேவைப்பட்டது அதைப் பெறுவதற்காக ஆற்றும் கருமங்கள் யாவும் தொழில் எனப்பட்டது. அதற்குக் கல்வி தேவைப்பட்டது. மனிதன் கற்கவேண்டும் கற்றதற்குத் தக்கவாறு நன்னெறியில் நின்று வாழ வேண்டும் அதற்குப் பொறியடக்கம் புலனடக்கம் அவசியமாகின்றது. கல்வி என்கின்ற மேய்ப்பான் மூலம் ஐம்புலன்களும் தன் வெறியை அடக்கிக் கொண்டால் இவ்வுலகில் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து ஈடேற்றம் பெறமுடியும். (திரும.2883) இடைவனப்பும், தோள் வனப்பும், ஈடில்லாத புறவனப்பும், நடைவனப்பும், நாணத்தால் வருமழகும், கழுத்தினழகும் அழகல்ல எண்ணாலும் எழுத்தாலும் வருகின்ற கல்வி அழகே அழகு என்றும் ஏலாதி ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (ஏலம்.74) கல்வி கற்பவனுக்கு உதவி செய்பவன் நல்வாழ்வு பெறுவான் என்றுரைக்கின்றார். (ஏலம்.63)

பெருமை, புகழ், சினத்தினை விரும்பாமை என்பன அரிய நூலுணர்ச்சி பெருந்தன்மையும் இல்லாதவர்களைச் சேர்தல் கேடு தரும் எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏலாதி புகழுக்குரியவர்கள் சான்றோர்கள் என மொழிகின்றது. (ஏலம்.60)

பண்டைத் தமிழர்கள் அடிப்படையில் பொருள் முதல்வாதச் சிந்தனை உடையவர்கள். நிலத்தினையும் உலக இயக்கத்திற்குக் காரணமான பொழுதினையும் முதற் பொருளாகக் கொண்டுள்ளனர். அப் பொருளுடைமை இல்லறமாற்றச் சிறந்தது என அறநூல்கள் வலியுறுத்தின. இல்லறப் பண்பாக உலகியல் சார்ந்ததும், பாலியல் சார்ந்ததுமான அன்புடைமையையும் அதன் பயனான மக்கட்பேற்றையும் ஏலாதி விளக்குகின்றது. இல்லறத்திற்கு விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, வினையச்சம், ஒப்புரவு, ஈகை, புகழ், என்னும் அறங்களை கணிமேதாவியார் வலியுறுத்துகின்றார். அவரிடம் துறவறத்திலும் இல்லறமே சிறந்தது என்ற கொள்கை மேலோங்கி நிற்கின்றது.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்" (குறள்-46)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் மனித சமுதாயத்திற்கு இல்லறம் எவ்வளவு முதன்மை

உடையது என்பதனை வெளிப்படுத்துகின்றார்.

இல்லறத்தில் வாழ்பவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் துணை நிற்பான் என்றும், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் இல்வாழ்வானின் சிறந்த கடைமை யாகும் என்றும், ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால் அவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான். அவன் அறத்தின் இலக்கணங்களைச் சரியாகக் கடைப்பிடிக்கின்றவனாக இருப்பான். என்னும் கருத்துக் களை ஏலாதி பல பாடல்களில் பாடியிருப்பதனைக் காணலாம் (ஏலம்.34,35,71,76,80)

அறநூல்கள் நிலையாமையை உணர்ந்து கொள்ளுவதற்குப் பல வழிகளைக் கையாண்டுள்ளன. ஒரு மனிதன் நிலையில்லாதவற்றினைப் பகுத்து உணர்ந்து, அதில் நிலையற்ற செல்வத்தினைக் கொண்டு நிலையான அறத்தினைச் செய்தல் வேண்டும். (குறள்-131,332,333), அறத்துடன் நின்று பொருளைப் பிறருக்கு ஈவதே சிறந்தது, ஈயாதோர் தேடிவைத்த பொருளை இழந்துவிடுவர் ஆதலால் பொருள்வாழ்வு முதன்மை யானதன்று அறவாழ்வே முதன்மையானது. (நாலடி.02,10,32) செல்வத்தின் வலி குன்றும் ஆதலால் அறமற்ற செயல்களைச் செய்யாதே. (ஏலம்.21) செல்வம் இருக்கும்போது தாமதிக்காது அறத்தினைச் செய்துவிடல் வேண்டும் என்று கணிமேதாவியார் செல்வத்தின் நிலையாமையைத் தெளிவுபடுத்துகின்றார். செல்வம் பற்றிய இத்தகைய கருத்துக்கள் பழந்தமிழிலக்கியங்களிலிருந்து தொடர்வதைக் காணலாம்.

இளமை நிலையாமை இயல்பானதொன்று அது காலவோட்டத்தில் நிலைமாறிக் கெட்டுவிடும். (நாலடி.17) அவ்விளமையை அறவழியில் நின்று முறையாகக் கழிக்காமல் வீணே செலவழிப்பவர்கள் நரை திரை மூப்புடன் கோலூன்றித் துன்புற்றுழல்பவர்கள், (ஏலம்.21) மூப்பும் பிணியும் வந்துசேரும் உடல்வலியும் குன்றும் ஆதலால் அறமற்ற செயல்களைச் செய்யாதே. (ஏலம்.21) அறிவுடையவர்கள் இளமையை மதிக்க மாட்டார்கள். இல்வாழ்வினைத் தழை என ஒதுக்கிவிடுவர் நல்ல நூல்களின்பால் கண் ணோட்டமுடையவராகி வீடுபேறடைவர்(ஏலம்.23) என்றவாறு ஏலாதி நிலையில்லாத இளமையை சுட்டிக்காட்டி அதனை எண்ணிப் பெருமைகொள்ளாதிருத்தலே அற மென்றுரைப்பதனைக் காணலாம்.

இயற்கை நெறிக் காலத்தின் வாழ்வியல் சிதைவைச் சீர்செய்ய வேண்டிய தேவை அறநெறிக்கால இலக்கியகாரருக்குக் கடமையாகப்பட்டது. அதனால் அவர்கள் சீர்திருத் தக் கருத்துக்களை அற ஒழுக்கக் கருத்துக்களாக வெளிப்படுத்தினர். மேலும் தருமத்தின் சிறப்பு, தூய்மையின்மை, பற்றற்ற நிலை, கோபங்கொள்ளாமை, என்னுமதிகாரங்களில் நிலையான அறத்தினையாற்றுவதற்கு நிலையற்ற பெண்ணின்பமே காரணமென்று பெண்ணின்பத்தைத் தூசித்தும், பெண்ணுடலை அசுத்தமென்றுரைத்தும், வரைவின் மகளிர் ஒழுக்கத்தினைத் தூசித்தும் பாடல்களை யாத்துள்ளனர். இல்லற வாழ்வினைத் துன்பம் நிறைந்ததென்று அறநூல்கள் போதித்தன. அந்தக்கருத்துக்களை ஏலாதியும் ஓரளவு ஏற்றுள்ளதைக் காணலாம்.

யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை போன்ற கருத்துக்கள் எல்லாவகையான அற நூல்களிலும் உரைக்கப்பட்டுள்ளன. இவ் யதார்த்த பூர்வமான கருத்துக்களைச் சமூக சமத்துவத்திற்கும் சமாதானத்துக்குமான ஒரு கருத்திய லாக அறநூலாசிரியர்கள் கையாண்டுள்ளனர். மனிதர்கள் தங்கள் உடலுக்கு

அழிவுண்டென அறிந்தும் அதனைக் காப்பதற்கான போராட்டங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அறம்போதிக்கும் இலக்கியங்களுடன் ஏலாதியும் கைகோர்த்து சமூக ஒழுக்கவியல் நடைமுறையை போதிப்பதற்காகச் சமூகத்திற்கு அவசியமான பற்றறுக்கும் கருத்துக்களை முன்வைத்துள்ளது.

இன்றைய உலக பல்லின பண்பாட்டுச் சூழலில் ஏலாதியினதும் ஏனைய அறநீதி இலக்கியங்களினதும் இல்லறவியல் சார் நெறிப்படுத்தல்களும் எவ்வாறு துணை புரியும்? அறநீதி இலக்கியங்கள் கட்டமைத்துக் காட்டிய இல்லறத்தின் வரையறை இன்று இயைபாக்கம் பெறமுடியுமா? மனித விழுமியப் பண்புகளை திருக்குறளில் குறிப்பிட்டுக் காட்டிய ஆண்மையின் குணவியல்புகள் புறந்தள்ளிச் செயற்படுகின்றனவா? எனத் தோன்றுகின்ற சிக்கலான எண்ணக் கருக்கள் எல்லோரிடமும் எழுந்துள்ளது. இன்றைய மனிதர்களின் வாழ்வியல் நெறிமுறைகள் எந்திர மயப்பட்டதாக மாற்றங்கண்டுள்ளன. அறிவியலின் முன்னேற்றம் மக்களைப் பெரிதும் பிணித்துள்ளது. வாழ்வியலில் பிரதானப்பட்டு நிற்கின்ற உணவு, உடை, உறையுள் என்பவை பரிணாமமடைந்துள்ளன. முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவந்த பண்பாட்டு வாழ்வியல் மரபுகள் புறந்தள்ளப்பட்டு புதிய வாழ்வியல் நடைமுறைகள் சூழலோடு பின்னிப் பிணைந்துள்ளன. இந்த நிலையில் சிக்கலான வாழ்வியல் கட்டமைப்பில் “தக்கன பிளைக்கும்“ என்னும் கோட்பாடு வலிமைபெற்று பிளைப்பதற்கான போட்டிகளும் போராட்டங்களும் சூழ்ச்சி களும் வாழ்க்கைப் பிறழ்வுகளும் மலிந்துள்ள உலகில் வாழ்க்கையில் துன்பங்களும் துயரங்களும் பெருகிவிட்டன. இவற்றைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக புதிது புதிதாகச் சட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோதும். அச்சட்டங்களில் இருக்கின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்கூடாக புதிய புதிய குற்றங்கள் நடந்தேறுகின்றன. ஒரு பிரதேசத்தில், நாட்டில், உலகில், இனம், மதம், மொழி, முதலானவை சார்ந்து வகுக்கப்படும் சட்டங்களைவிட குற்றங்களின் பெருக்கம் எல்லைதாண்டி நிற்கின்ற நிலையில். ஆட்சியாளர்களும், சட்டங்கள் வகுப்பவர்களும், அதை நடைமுறைப்படுத்துபவர்களும், நாடுகடந்த சட்டங்களும், உலக ஒருமைப் பாட்டுக்காக வகுத்துக்கொண்ட சட்ட ஒழுங்குவிதிகளும், மனித உரிமைகளும், அதனை நடைமுறைப்படுத்துபவர்களின் சுயநல நோக்கம், தேவைப்பாடுகள், சம்பவங்களுடன் தொடர்புடையவர்களின்மீதும், அவர்களின் உடைமைகள் மீதும், அவர்கள் சார்ந்திருக் கின்ற நாட்டின்மீதும் பிரதேசத்தின்மீதும் கொண்டிருக்கின்ற பேரவா என்பனவும் சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள்மீது அதிகாரத்தினை உடையவர்களால் திணிக்கப்படும் அழுத்தங்களும் அகவயத்தாக்கமாகப் பரிணாமித்துச் சட்டங்களைத் தமக்கும் தாம்சார்ந்தவர்களுக்கும் ஏற்றால்போல் வளைத்துப்போடுகின்ற கைங்கரியங்கள் நடைபெறும் இக்காலகட்டத்தில் இவை சாத்தியமற்றவையாகவே காணப்படுகின்றன.

ஆனாலும் அறநீதி இலக்கியங்கள் இத்தகைய குழப்ப நிலையுள்ள ஒரு காலகட்டத்திலேயே தோற்றம்பெற்றன அவ்விலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியல் சிதைவினை மீட்டெடுக்கும் மருந்தாகின. ஆகவே ஏலாதியின் அற ஒழுக்கக் கருத்துக்களை சமூகத்தில் நெறிப்படுத்தவேண்டிய கட்டாயத்தினைத் தமிழ்கூறும் நல்லுலகு இன்று அறிந்துள்ளதென்றே கூறலாம்.

**நிறைவுரை:**

அறநெறிக்கால இலக்கியங்களின் அறக்கொள்கைகளும் அக்காலச் சமய மரபில் பேசப்பட்ட அறக் கருத்துக்களையும், நிலைமாறாக் கருத்துக்களையும், கொள்கைகளையும் அதிகம் பயன்படுத்தியுள்ளன. ஏலாதியும் ஈடேற்றம் அடைவதற்கு இல்லற வாழ்வின் பின்னரான துறவினையே வலியுறுத்துகின்றது. ஆகவே கணிமேதாவி யார் அறநெறிக் காலத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த சமண பௌத்த அறக்கருத்துக் களுக்குள் நின்றாலும் சைவநெறியில் கடைப்பிடிக்கப்படும் நல்வினை, தீவினை, பாவம், புண்ணியம், அறநெறி முறைகள், இறப்பிற்குப் பின்னரான சுவர்க்கம், நரகம், ஆன்ம விடுதலை போன்றனவற்றிலான நம்பிக்கையின்பால் மேலெழும் அறக் கொள்கை களையே தனது படைப்புக்களில் கையாண்டுள்ளார்.

ஒரு நாடு நாடாக விளங்குவதற்கு அது ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்வியலைப் பின்பற்றவேண்டும். அதனைப் பின்பற்றுவதற்கு அந்நாட்டினை ஆளுவோர் உரிய நடைமுறைகளை ஏற்படுத்துவதுடன் தாமும் அதனைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். அதற்கு வழி கூறுவதற்கு இலக்கியங்கள் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றிய ஒரு இலக்கியமே ஏலாதியாகும். அது இல்லற, நல்லற, துறவற வாழ்வின் முக்கியத்துவத் தினைப் பதிவு செய்துள்ளது எனக் கூறின் மிகையாகாது. ஆனாலும் ஏலாதியில் கொல் லாமை, கொலைக்குத் துணைபோகாமை, புலாலுண்ணாமை, பொய் சொல்லாமை, ஆகிய அறங்களைக் கூறியது கூறலாகப் பல இடங்களில் மொழிந்திருப்பதனைக் காணலாம்.

நல்லறமாற்றுவதற்கு வெகுமதியாக இன்மையிலும் மறுமையிலும் பெண்ணின் பத்தில் திளைக்கும் பேறு, நிலையான கல்வி, குறையாத செல்வம், செல்வராய் பிறத்தல், நன் மனையாளும், நற்புத்திரப் பேறுடனும் கூடிய சிறப்பான இல்லற வாழ்வு, சான்றோர் சேர்க்கை, மன்னராய் பிறத்தல், அரச போகம், வீடுபேறு, சுவர்க்க வாழ்வு, பிறவாத பேறு என்பவற்றை வெகுமதிகளாகக் கூறி அற ஒழுக்க நெறிகளை வற்புறுத்துகின்றார். ஏலாதியில் அறத்தினையும், அறம்சார் விடயங்களையும், மறத்தின் கேட்டையும் கணிமேதாவியார் சித்தரித்திருப்பதும் அதனை பிற்கால அற இலக்கியவாதிகள் கையாண்டிருப்பதும் இன்றுவரை கணிமேதாவியாருக்குப் பெருமை சேர்த்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அற இலக்கிய வரலாற்றிலும் கணிமேதாவியார் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளமை தவிர்த்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்.

**துணை நூற்பட்டியல்.**

1. சிதம்பரணார். சாமி., (1957). பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும். ஸ்ரார் பிரசுரம். சென்னை:
2. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார். (1956). பதிணெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். திருநெல்வேலி
3. திருநாவுக்கரசு.க.த., (1987).தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை:
4. நடராஜன்.சோ. (2008). தம்மபதம். : குமரன் புத்தக இல்லம்.கொழும்பு
5. நடராசன்.பி.ரா., (2009). பதினெண்கீழ்க்கணக்கு (வரிசை -06). திருமகள் நிலையம்.சென்னை
6. முத்துலட்சுமி.ச. (?) அறவியலும் பண்பாடும். பாவை பிறிண்டேஸ் (பி)லிமிடெட்.சென்னை
7. ரம்போலா மாஸ்கரேனஸ். எம்.ஏ., (1956). பதினெண் கீழ்க்கணக்கு விளக்கம்: ஒற்றுமை ஆபீஸ். சென்னை
8. ராஜ் கௌதமன்., (1997). அறம்/அதிகாரம்: விடியல் பதிப்பகம். கோவை